1715

1715

OFFICE OF THE GE…
18 MAR 1935
E A C

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

| | | |
|---|---|---|
| தொகுதி-கஉ] | பவ வருஷ பங்குனிமீ | [பகுதி-ரு. |
| Vol. XXXII. | *March-April 1935.* | No. 5. |

உள்ளுறை.


| | | |
|---|---|---|
| மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களின் ஸதாபிஷேகக்கொண்டாட்ட நிகழ்ச்சியும் வாழ்த்தும்:— | | கஉக—கஉகூ |
| எண்பத்தொன்றும் பிறந்தநாள்:— | ஸ்ரீமத். வே. சா. வேங்கடராமையர் | கரு0—கருஉ |
| பரிசோதனைத்தொடர்:— | ,, T. N. அப்பனையங்கார் | கருரு—கருசு |
| கம்பராமாயண இன்கவித்திரட்டு:- | ,, ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G B. V.C. | கருஎ—கசச |
| காலம்:— | ,, வித்வான K. S. விஸ்வநாத சாஸ்திரியார் P O L. | கசரு—கருக |
| மதிப்புரை:— | | கருக—கருஉ |
| பெருந்தொகைப் பொருட்குறிப்பகராதி: | ,, மு. இராகவையங்கார் | 1–6 |
| குருகைமான்மியம்:- | T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். | 281–296 |


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4 | [தனிப்பிரதி அணா—8

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0

1935.

Srimathu R. SHANMUGA RAJESWARA
…A SETHUPATHY AVERGAL and
…HIRU. NARAYANA IYENGAR at the
… Press, No. 54, New Jail Road, Madura.

215059

3

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAR 1935
MADRAS



மஹாமஹோபாத்யாய த்ராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி Dr. ப்ருஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.


தொகுதி-௩௨] பவ ௵ பங்குனி ௴ [பகுதி-௫.

Vol. XXXII. *March-April 1935.* No. 5.


மஹாமஹோபாத்யாய ஐயரவர்களின்

## ஸதாபிஷேகக்கொண்டாட்டம்.

அமுதினும் இனிய தமிழ்மொழியும் தமிழ்நாடும் செய்த தவப்பேற்றால் உத்தமதானபுரத்துதித்துத் தமிழணங்கைப் பல்லாண்டுகளாகத் தாமியற்றும் நற்பணிகளால் அலங்கரித்துவருபவர்களாகிய ப்ருஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய த்ராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி டாகடர் உ. வே. சாமிநாதையரவர்களின் ஸதாபிஷேக மஹோத்ஸவக் கோண்டாட்டம், நாளிது பவ ௵ மாசி ௴ 23உ (6—3—35) புதன்கிழமை மாலை 5½ மணிமுதல் 8½ மணி வரை மதுரைத்தமிழ்ச்சங்க மண்டபத்தில் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாராலும் மதுரை ராமநாதபுரம் ஜில்லா பண்டிதர்சங்கத்தாராலும் ஒருங்குசேர்ந்து பெருஞ்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

அவ்வமயம் தமிழபிமானமிக்க புலவர்பெருமக்களும் வழக்கியலறிஞர்களும் செல்வர்களும் மாணவர்களும் பிறரும் திரளாக விஜயம்செய்திருந்தனர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உபாக்ராஸநர் ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C. அக்ராஸநராக வீற்றிருக்கக் கடவுள்வாழ்த்துடன் ஸபைநிகழ்ச்சி தொடங்கிற்று.

முதலில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் சார்பாக, மஹாமஹோபாத்யாயஐயரவர்களின் அருமை பெருமைகளைப் பாராட்டிச்

செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் T. K. இராமநுஜையங்கார் இயற்றிய வாழ்த்துப்பத்திரம் அவரால் படிக்கப்பட்டது. அதன்மேல் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர் ஸ்ரீமத் பண்டித ஹரிஹரையரவர்கள் தாம் இயற்றிய வாழ்த்துப்பாடல்களையும், யாழ்ப்பாணத்துப் பரமேசுவரக்கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீமத் K. S. நவநீத கிருஷ்ணபாரதியவர்கள் இயற்றியனுப்பியிருந்த நாண்மங்கல வாழ்த்தையும், கும்பகோணம் நேடிவ்ஹைஸ்கூல் தமிழாசிரியர் ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையரவர்கள் எழுதியனுப்பிய எண்பத்தோன்றும் பிறந்தநாள் என்ற கட்டுரையையும் படித்தார்கள்.

பின்பு மதுரை அமெரிக்கன்கல்லூரித் தமிழாசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோனாரவர்கள், யாழ்ப்பாணத்துத் தமிழ்த்தொண்டன் பத்திராசிரியர் திரு. V. M. கனகசுந்தரம் அவர்கள், மதுரையிலுள்ள இராமேசுவர தேவஸ்தான மஹாபாடசாலைப் பிரின்ஸிபால் ஸ்ரீமத். V. சுப்பிரமணிய ஐயரவர்கள் B.A., L.T., ஸ்ரீ. உ. வே. வித்வான் காண்டூர் ராமாநுஜாசாரியரவர்கள், ரிட்டயர்டு சிரஸ்தார் திரு. முத்திருளாண்டிபிள்ளையவர்கள், மதுரைக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீமத். C. V. கிருஷ்ணமூர்த்திராவ் M. A. அவர்கள், திரு. R. ராமஸ்வாமி அவர்கள், மதுரைக்கல்லூரித் தமிழாசிரியர் திரு. பண்டித. ஆ. அரங்கராமாநுஜம்பிள்ளையவர்கள், மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர் குருசாமி, ஸ்ரீநிவாஸன்—ஆகிய இவர்கள் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் தமிழ்மொழியடைந்திருந்த தாழ்நிலையையும், பின் ஐயரவர்கள் நன்முயற்சியால் தமிழ்மொழியடைந்த உயர்நிலையையும், ஐயரவர்களாற்றிவரும் தமிழ்ப்பணியின் சிறப்பினையும், அவர்களுடைய ஞானசீலங்களையும், பெருந்தகைமையினையும், அவர்கள் தம்பால்வரும் மாணவரைப் பலகலையுணரும் பருணிதராகப் பயிற்றுவிக்கும் பான்மையினையும், அவர்கள் தம் ஆசிரியரிடத்துக்கொண்ட பெரும்பற்றினையும் பலபடியாகவிரித்துபந்யசித்தார்கள்.

பின்னர், செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீ. உ. வே. திரு. நாராயணையங்காரவர்கள், ஐயரவர்கள் தம்நூற்பதிப்புக்களால் தமிழ்மொழிக்குச்செய்துவரும் பேருபகாரத்தையும், மரபிற்றிரியா



மாண்பினவாக உரையும் பாட்டுமியற்றும் ஐயரவர்களின் நிறைபேராற்றலையும் பாராட்டி, ஐயரவர்கள் ஜீவியசரிதம் தமிழுலகுக்குப் பலவகையாலும் மிகுந்த பயனளிக்கத்தக்கதென்றும், அதனை ஒருசிறிதும் எஞ்சாதெழுதல் அவர்களுக்கே இயல்வதென்றும், மேனாட்டறிஞர் தம்சரிதம் தாமே எழுதியுதவுதல்போல இவர்களும் தமிழறிஞர்வேண்டின் தம்சரிதம் எழுதியுதவ இசையக்கூடுமென்றும் பேசி,

> "ப்ருஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய திராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களை அவர்களுடைய ஜீவியசரித்திரத்தை அவர்களே எழுதித்தர வேண்டுமென்று இச்சபையார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்"

என்ற பிரேரணையை விவரித்துப் பிரேரிக்க, மதுரைப் புத்தக வர்த்தகரும் தமிழ்வளர்ச்சியிற் பெரும்பற்றுடையவரும் அதற்கு உதவிவருபவரும் ஆகிய ஸ்ரீமான். இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்கள் ஐயரவர்கள் சரிதம் புத்தகஉருவில் வெளிவருவது மிகவும் அவசியமென்று வற்புறுத்தி ஆமோதிக்க, ஸபையோரால் பெருமகிழ்ச்சியுடன் ஒருமுகமாக அங்கீகரிக்கலாயிற்று.

அதன்மேல், ஸபைத்தலைவரான ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், தமிழ்மொழியையும் தமிழ்ப்புலவர்களையும் ஸேதுமன்னர்முதலிய புரவலரும், திருவாவடுதுறைமுதலிய ஆதீன கர்த்தர்களும் ஆதரித்துப் போற்றிவருமாறும், ஐயரவர்களுக்கு ஆசிரியராகிய மஹாவித்வான் மீநாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் சீர்மை விளங்குமாறும், ஐயரவர்கள் பிள்ளையவர்களாலும், திருவாவடுதுறையாதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகராலும், சுப்புராய செட்டியார் தியாகராயசெட்டியார் சேலம் ராமஸ்வாமி முதலியார் அரங்கநாதமுதலியார் முதலிய தக்கோர்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவாறும், சிந்தாமணிமுதலிய நூல்கள் அச்சிற்பதிக்கப்பெற்றவாறும், ஐயரவர்களுடைய இடைவிடா உழைப்பும் ஊக்கமும் இத்தகையவென்பதும், ஐயரவர்கள்சரிதம் தமிழ்மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதொன்றென்பதும், அதனையெழுதத்தக்கவர்கள் அவர்களே என்பதும், அதனை அச்சிட்டு வெளி

யிடத்தக்கார் அது விஷயமான பிரேரணையை ஆமோதித்துப்பேசிய ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களே என்பதும் நன்கு விளங்கச் சற்றேறத்தாழ ஒரு மணிநேரம் அரியதோர் விரிவுரையாக முடிப்புரைகூறினார்கள்.

பின்னர் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியவர்களாகிய ஸ்ரீமான் N. R. கிருஷ்ணஸ்வாமிஐயங்காரவர்கள் வந்தனோபசாரங்கூறுமுகத்தால் ஐயரவர்களுடைய நன்முயற்சியால் தமிழ்மொழியேயன்றித் தமிழ்நாடும் பிறர் நன்குமதிக்கத்தக்கநிலையையடைந்ததென்றும், தமக்கு அவர்களுடன் நெருங்கிய பழக்கமுண்டென்றும், அவர்களுடைய குணவிசேஷங்கள் மிகவும் கொண்டாடத்தக்கனவென்றுங்கூறி, ஐயரவர்கள் இன்னும் பல்லாண்டு அரோகதிடகாத்திரராய் வீற்றிருந்து தமிழ்ப்பணிபுரிந்துவாழ அருள்புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனைப்பிரார்த்தித்து, சங்கத்தார் அழைப்புக்கிணங்கி இக்கொண்டாட்டத்துக்குவந்து ஸபையை அலங்கரித்த கனவான்களுக்கும், உபந்யஸித்துக் கொண்டாட்டத்தைச் சிறப்புறச்செய்த புலவர்பெருமக்களுக்கும் நன்றிசெலுத்தக் கடவுள்வாழ்த்துடன் ஸபைநிகழ்ச்சி இனிது நிறைவெய்தியது.

சங்கத் தமிழ்ப்பனுவல் சாலப் பதித்துதவி
எங்கட் கிதயத் திருள்கடிந்து—தங்குதலால்
ஓராழியான்போல் உலகுதொழ வாழிபெரும்
பேரா சிரியர் பிரான்.

T. K. இராமாநுஜையங்கார்.
**உதவிப்பத்திராசிரியர்.**

---

**மஹாமஹோபாத்யாய திராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி Dr.**
ப்ருஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களின்
**எண்பதாம் ஆண்டுநிறைவுவிழாக்கொண்டாட்டம்**
**6—3—35ல் மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் நிகழ்ந்தபொழுது**
**மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் படித்த**

## வாழ்த்துப்பத்திரம்.

பூமடந்தை பொலிவுபெறப் புகழ்மடந்தை களிகூரப் புலவர் போற்ற
நாமடந்தை நலஞ்சிறக்க நல்லவர்பல் லாண்டிசைக்க நன்மை சான்ற
பாமடந்தை யுளங்குளிரப் பைந்தமிழ்செந் தமிழாகும் பான்மை மேவ
நாமடைந்த பெரும்பேற்றால் எல்லோருங் கொண்டாடும் நன்னா ளிந்நாள்.

பல்லாண்டு பயின்றாலும் பொருளுணர்தற் கரியதமிழ்ப் பனுவ லெல்லாம்
சில்லாண்டுபயில்பவருந்தெரிந்துரைக்கப்பொறித்தளித்தசேசான்மிக்கோன்
சொல்லாண்ட தமிழ்ப்புலமைச் **சாமிநா தப்பெரியோன்** தோன்றி நீண்ட
**நல்லாண்டு நாலிருபா** னெனநிகழா நின்றதிந்த நன்னாண் மன்னே.

முதலைவாய்ப் படுகளிறு காத்தளித்த முகில்போல முதுநூ லெல்லாம்
சிதலைவாய்ப் படுமளவி லிறவாது காத்தளித்த செம்மல் அம்மா!
குதலைவாய்ப் படுமினிய தமிழ்மொழியின் குற்றேவல் கொள்ளற் கேற்ற
மதலையாய்ப் பணிபலவும் புரிந்தனனால்; அவைசொல்ல வல்லார் யாரே.

கற்பினுயர் கலைமகளுக் கினியபொரு ளுரைபலவும் கற்பித் துள்ளோன்
அற்பினுயர் மாணவருக் கருந்தமிழ்நூற் பொருளனைத்தும் அளிக்கும் சீரான்
பொற்பினுயர் கவிபாடும் புலமையினுந் தலைமையுளோன் புவியுள் ளோர்கள்
பிற்பினுயர் வடையும்வகை நூல்பொறித்தீந் திடுதிறத்தும் பெரியோ னுமால்.

**பாராரும் இசையருளி யிடும்பெரும்பே ராசிரியப் பட்டம் பெற்றோன்**
ஏராரும் **உலகதரு வார்**மதுரைத் தமிழ்ச்சங்கத் தினிதின் ஈந்த
சீராரும் **தாக்ஷிணாத் தியகலா நிதி**யெனும்பேர் சிறந்தோன் **சென்னை**
ஊராா்**பல் கலைக்கழகம்** உதவிய **டாக்டர்**ப்பெயர்பெற் றுயர்ந்தா னன்றே.

எக்காலத் தமிழ்ப்புலவர் சரிதமும்நன் கறிந்துரைக்கும் இயல்பு வாய்ந்தோன்
தக்கார்கள் மதிக்கும்வகை யாசிரிய னிடத்தன்பு சான்றோன் தன்பாற்
புக்கார்கள் தமிழறிவிற் சிறியரா யினும்உதவி புரிந்து போற்றும்
மிக்காண்மற் றேவர்செய்த சிறுநன்றி யையுமறவா மேன்மை யோனே.

இந்நாளி லிவன்பெருமை யியம்பவெளி தோஅதனுள் ஏக தேசம்
சொன்னாலும் அவைமுழுதும் உலகம்அறிந் தனவாகும் துலைவே றில்லாத்
தன்னாலும் சொலற்கருஞ்சீர்ச் **சாமிநா தேந்த**னுக்குத் தமிழ்நா டெல்லாம்
எந்நாளும் நன்றிபுரிந் தினிதிருத்த லன்றிமற்றென் றியற்றற் பாற்றே.

பொதியவரை யிருந்துதமிழ் புரந்துதிருந் தகத்தியனே புவியின் மீட்டும்
மதியினுயர் தமிழ்த்தழைய வந்துதித்தா னெனப்புலவர் வழுத்து மாறு
புதியமுறை யினிற்பலசெந் தமிழ்நூல்கள் ஆய்ந்தச்சிற் பொறித்து நல்கும்
நிதியனைய புலவர்பிரான் **சாமிநாதப் பெரியோன் நெடிது வாழி.**

தென்மொழியாய் வடமொழியாய் நின்றருளும் புல்லாணித் திருமால் பாதம்
இன்மொழியாற் றுதி**நாக நாத**னெனும் **சேதுபதி** யினிது வாழி
பன்மொழிமாந் தரும்பரவ நிலவுலகம் ஒருகுடைக்கீழ்ப் பரிபாலிக்கும்
நன்மொழிசேர் **ஐந்தாம்ஜார்ஜாசர்பிரான் செங்கோல்**எந் நாளும் வாழி.

---

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலாசிரியர்

## ஸ்ரீமத் பண்டித ஹரிஹரையரவர்கள் இயற்றிப் படித்த வாழ்த்து.

தண்டமிழ்க் கடலின் மூழ்கித் தனிப்பெரு நிதிய மாகும்
பண்டைநூல் கொழித்தெ டுத்துப் பயன்பெறச் செப்ப னிட்டே
யொண்டமி ழுலகிற் கீந்த வுத்தம தானம் வாய்ந்த
திண்டிறற் சாமி நாதன் றிருவளர் மாலை யாமால்.

சொன்னலம் பொருண லங்க டுவன்றிய தமிழா ராய்ந்து
தன்னலங் கருதா தூற்ற தனிப்பெரு மிடர்கள் தாங்கிப்
பன்னுநூ லமுத மீந்த பான்மையிற் சாமி நாதன்
துன்னிய கடுவை யேற்றுச் சுதைசுரர்க் கீந்தோ னாவான்.

கலைவளந் தனக்கே யுள்ள கலைமக ளுறைத லாலும்
நிலையுள மறையோ னென்ன நிகழ்த்திடும் பான்மை யாலும்
உலைவறத் தவஞ்செய் தோர்கட் குண்மைநூ லுரைத்த லாலும்
கலைநிதிச் சாமி நாதக் கலைஞனும் பிரம னாமால்.

சொற்றவிந் நிலைமை யோர்ந்தே துரைத்தனத் தார்க ளீந்த
மற்றைய சிறப்பி னோடு மஹாமஹோ பாத்தி யாய
நற்பெரு விருதும் ஏற்று நாடுபல் கலைச்சங் கத்தார்
பிற்பட வளித்த டாக்டர் எனும்பெரு விருதும் பெற்றோன்.



நாடருங் கலைக ளாய்ந்த நற்றவன் காம கோடி
பீடமார் முனிவ னன்னோன் பெருமைதேர்ந் தன்பி னீந்த
பாடமர் தாக்ஷி ணாத்ய கலாநிதிப் பட்டம் வாய்ந்தோன்
நீடுறு மாயுள் பெற்று நிலவுக புவியின் மாதோ.

வேறு.

பண்புறு மஹாமஹோ பாத்தியா யப்பெருமை
பாரித்த சாமி நாத
அண்ணலுக் கெண்பதாம் ஆண்டுநிறை வுற்றவிவ்
வரியதிரு நாளை யன்பர்
நண்பரொடு கூடியே கொண்டாடு நோக்கமும்
நன்குநிறை வுறுக வன்னோன்
சண்முகக் கடவுள்போ லென்றுமிளை யானாய்த்
தமிழ்ச்சுவை யருந்தி வாழி.

---

பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய
திராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி

## Dr. உ. வே. சாமிநாதையரவர்கள்பேரிலே

யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும்,
கலாநிலையமும் இட்ட கட்டளைப்படி
க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார் இயற்றிய

## நாண்மங்கலவாழ்த்து.

பூவிரி சோலைக் காவிரிப் புனலுள்
தோய்ந்தனங் குளிர்ந்து தோன்று குடமுனிப்
பொதியச் செந்தமிழ் மதியச் சந்தனம்
பூசிப் புனைந்து வீசிப் பரந்த
கலைதரு சீர்த்தி கவின வுதித்த
மதியணி வேணி மாபெருங் கடவுள்
துதியமு துண்டுவருந் தோலா நாவினை;
தமிழ்ப்பா லுண்ணலின் தமிழ்மக வாயினை;
தமிழ்கலை னுகர்தலின் தலைவனு மாயினை;
தமிழ்தரு நலத்தால் தாயு மாயினை;
தமிழுட லாகின் நீயுயி ராகுவை;
தமிழுயி ராகின் நீயுட லாகுவை;

தமிழை யாழாக்கித் தமிழ்ப்பா விசைக்குவை;
நினையா ழாக்கித் தமிழுமிசை யெழுப்பும்;
என்புநெக் குருக்குந் *தென்கலைத் திருவினை;
சீரா னுயர் †பெரும் பேரா சிரியனை;
பெரும்புகழ் படைத்த வரும்‡பே ரறிஞனை;
ஆனைப் புலமை மீனாட்சி சுந்தரப்
பாற்கட விருந்து மேற்கலை முகந்து
சொல்லே ருழவ ரெல்லாரு மேத்தித்
தத்தம் புலங்களின் முத்தமிழ்ப் போகமும்
வருந்திமுய லிலாஅ விருந்துவிளை வெய்த
மடியாக் குணமலை முடிமே லிருந்தே
ஆய்ந்தகரு முதலா வேய்ந்தவை முற்றி
முன்னு மின்னலால் துன்னு மிடியால்
துன்பிலா துலக மின்புற வொளிசெய்
தின்னுரை யியம்பி மன்பதை மகிழ்கொள
நான்மறை பொழியும் தேன்குரன் முகிலினை;
பொருந்துநின் குருவின் திருந்தவ ராமெனும்
விருந்தமு தூட்டிய பெருந்தமிழ் வள்ளலை;
கடல்புக் கொளித்த புடவிதரு மால்போற்
சிலந்தி வலைக்குட் சிதலுணக் கிடந்து
கவிந்தழிந் தொழிந்த புலந்திகழ் சங்கப்
பனுவற்கு அச்சிந்து பவனிவரச் செய்தனை;
மணிமே கலையணிந்து மானங் காத்துச்
சிலம்பணி யணிந்து சிந்தா மணிமுடிக்
காவிய வுலகெலாங் களிகொளப் புனைந்து
வரும்கவ லகலப் பெருங்கதை யுரைத்துப்
புறமெலாம் புதுக்கித் திறனெலாங் காட்டிப்
பதிற்றுப் பத்தெனு மன்னரும் பரவ
ஐங்குறு நூறு மகங்குழை யன்பரும்
மங்கலப் பாட்டு மனம்பரி பாட
அந்தா திகண்முத லாகிய சுற்றம்
வந்தடி போற்ற வயங்கு நன்னூன்
மங்கலம் புனைந்து மயின்மே லிருத்திப்
புத்தமு தொத்த முத்தமி ழரசிக்குச்
செய்யாச் சிறப்பெலாஞ் செய்துகண் டுவக்குனை;
நான்மறை ஞானத் தேன்மழைத் தாமரைத்
தாரினை; காரினை யென்னுந் தமிழ்க்கலைக்

* தாக்ஷிணாத்யகலாநிதி. †மஹாமஹோபாத்தியாயர். ‡டாக்டர்.



கொடையினை; ஒள்ளிய நடையினை; வைதிகச்
சைவம் பழுக்குந் தெய்வத் தருவினை;
ஏமஞ் சான்ற இளந்தமிழ் புரந்துவரு
சேமஞ் சான்ற சாமி நாதனும்
ஒருபெயர் பூண்டமைக் கொப்பத்தமிழ் புரக்குனை;
நன்றுதரு மியற்றமிழ் நவின்றவ ரெல்லாம்
அன்றுதொல் காப்பிய ஞானவழி நின்றநின்
இன்றுநின் ஞானவழி யியங்குமா றியக்கினை;
ஓங்குது மெனத்தமி ழொருவின ராகி
ஆங்கிலம் பயின்ற வறிஞரு நின்னருட்
பாங்கடைந் துய்வான் பணிந்துவரு சிறப்பினை;
காதன் வெதுப்பினும் தீதுநீ கொளாது
ஓதி யின்னுரை உவக்குனை; இன்றுநீ
ஈண் டெண்ப தாவ தாண்டுநிறைந் தனையெனத்
தாண்டுமலை யுடுத்த தமிழக மெல்லாம்
பெருநா ளாகப் பேணுபு புரியுநின்
திருநாண் மங்கலத் தொருமாண் சிறப்பும்
பூண்டு வேண்டிய வேண்டியாங் கெய்தினை;
ஐய!
நின்னுறு பிறப்பே நிறைதமிழ்ப் பிறப்பே;
நின்னுறு வளர்வே நிகர்தமிழ் வளர்வே;
நின்னுறு பேறே நிலவுதமிழ்ப் பேறே;
நின்னுறு வாழ்வே நெடுந்தமிழ் வாழ்வே;
நினக்குச்செய் தொண்டே நிலைதமிழ்த் தொண்டே;
நீபுரி யருளே நிறைதமி ழருளே;
ஆகலின்,
இருசுட ருலகுக் கொருநீ யாகி
ஒருபே ராற்றலும் போற்றி வருநா
ளாயுளும் வேத வாசியு மடைந்து
நாவா லானெழுத் தைந்தையு நவின்று
பூவா லவனடிப் போதினை புனைந்து
செந்தமிழ் வண்மையும் வந்தமை தண்மையும்
மறாது வழங்கி யறாது புரந்து
நின்னல் லாவிநின் மெய்யொடு நிலைஇ
இன்ன லின்றி யின்பெலா மெய்தி
மன்னுக பெரும வழிவழி
ஒன்றங் கன்னித் தமிழுட னுவந்தே.

# எண்பத்தொன்றும் பிறந்தநாள்.

ஊ. சா. வேங்கடராமையர் எழுதியது.

செந்தமிழ் நாட்டில் முந்துபல் லாண்டாய்த்
தோன்றிவா னோக்கு மான்றசீ ரார்ந்த
தண்டமிழ்ப் பயிர்க்கோர் கொண்டல் மானப்
பொன்னிநன் னாட்டில் தன்னிகர் தானும்
புகழ்பெறு முத்தம தான புரத்தில்
தண்டமி ழறிவே இன்னிசைத் தெளிவே
சான்றவ ருறவே சங்கரன் பூசையே
என்பன கைவந் தன்பமர் சரஸ்வதி
அம்மையும் வேங்கட சுப்பிர மணியச்
சீரிய ருமபுரி நேரிய நோன்பின்
பயனு வுதித்த நயமிகு புனிதன்
ஆரியன் செந்தமிழ்ப் பேரிய லாசான்

என்று தமிழுலகம் போற்றிப் புகழும் பெருமை வாய்ந்து சிறந்து விளங்கும் ப்ரும்மஸ்ரீ, மஹாவித்வான், மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, த்ராவிட வித்யாபூஷணம், டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுடைய எண்பத்தோன்றும் பிறந்தநாள் நாளிது பவ-ஸு மாசிமாதம் இருபத்துமூன்றும் உ (6—3—1935) புதன் கிழமை தமிழ்நாட்டினரால் பல இடங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. இந்த நன்முயற்சியிலே முன்னின்று தொண்டியற்றிய பலருக்கும் முதற்கண் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது நாடு புராதனப்பெருமைவாய்ந்தது; தடுக்கமுடியாத பல்வேறு காரணங்களால் அப்பெருமையை யிழந்துநிற்பது. இங்ஙனம் பெருமையிழந்து வீழ்ச்சியுற்ற நாட்டினர்க்கு வாழ்ச்சி பெறத் துணைபுரிவன அந்நாட்டுப் புராதனநூல்களே. அந்த நூல்களே அவர்கள் கைக்கொள்ளவேண்டிய குறிக்கோள் இவை என்பதைத் தெளிவுறத் தெரிவிப்பன. "காலான முதற்பூமி கைவந்தால் முத்தியும் கைவந்ததாம்" என்பர். அங்ஙனமே "மனைக்குள் வைத்த பண்டங்களை மறந்தவன் வருடநூ றழுதாலும்—நினைத்துணர்ந்தபின் னன்றிக் கிட்டா" என்பர். இந்த இலக்கணங்களுக்குப் பொருந்த நமதுநாட்டினர் தாங்கள் மறந்திழந்த



தங்கள் பெருமைகளைப் பண்டைநூல்கள்காட்டும் குறிநெறிகளின் துணைக் கொண்டே பெற்று இன்புறுதல்வேண்டும்.

இம்முறையில் நம்மவர்க்குத் துணைசெய்யும் நூல்கள் பல. அவற்றுள் பெரும்பாலானவற்றை இறந்தொழிந்துபோகாமல் காத்துப் பதிந்துத்தருதல் எளியதொரு காரியமன்று; அருமையினும் அருமையானசெயலே. இத்துணை அரியசெயலைச் செய்தவர்களும், செய்பவர்களும் மிகச்சிலரே. இத்தகைய பெருமைக்குரிய செயற்கரும் செயலினைச்செய்து தலைசிறந்துவிளங்குகின்ற பெரியார்களுக்கு நாம் செய்யவேண்டிய கைம்மாறு பலதிறப்படும்.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பர் திருவள்ளுவர். நன்றியறிதலை மிகச்சிறந்த அறச்செயலாகக் கொண்டொழுகும் இயல்புவாய்ந்த தமிழ்நாட்டினர் இக்கட்டுரைத்தலைவராகிய ஸ்ரீமத் ஐயரவர்கள்பால் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். ஐயரவர்கள் உடல், பொருள், காலம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது தண்டமிழ்த்தாய்க்குச் செய்து வரும் தொண்டுகள் மிகப் பல. அவற்றை—

'சிந்தா மணியே நந்தா தறங்கூர்
மணிமே கலையே மன்னுஞ் சிலப்பதி
காரமே பத்துப் பாட்டே வெண்பா
மாலையே புறநா னூறே ஐங்குறு
நூறே பதிற்றுப் பத்தே துதிசேர்
பரிபா டல்லே பாரோர் வியக்கும்
பற்பல செய்தியைக் கற்பனை யுடனே
தந்துவப் பிக்கும் கொங்குவேள் கதையே
திருவிளை யாடலே அரியநன் னூலே
தாழிசை மணக்குந் தக்க யாகப்
பரணியே வொப்பிலாப் பாவலர் மணியாம்
தேசிக னாற்றொகைத் திரளே தேசிகர்
திரட்டே பலபல சிறுகாப் பியமே
பற்பல வுரையே திப்பிய சரிதமே'

என்று ஓராற்றான் நன்று தொகுத்துக் கூறுமாறு அமைந்து கிடக்கின்ற, அவர்கள் அரிதின் ஆராய்ந்து அச்சியற்றி வெளி

யிட்ட நூல்களின்பெயர்களைக் குறிக்குமுகத்தால் வெளிப்படுத்தலாம். "தொல்பலநூல் ஆய்ந்துசிவந்த" நெஞ்சினராகிய ஐயரவர்கள் செய்துவரும் திருத்தொண்டு இவ்வளவேயோ! அவ்வப்பொழுது பத்திரிகைகளில் வெளியிடும் கட்டுரைகளையும் கழகங்களில் இயற்றிவரும் விரிவுரைகளையும் சேர்த்துக்கொள்வதும் கடமையை உணர்ந்த செய்கையாகும்.

இவ்வாறு மாரிபோற் கைம்மாறுகருதாதுசெய்துவரும் ஐயரவர்களிடமிருந்து இன்னும் பல பயன்களையும் பெற்று இன்புறவேண்டித் தமிழ்மக்கள் செய்யவேண்டியன சில. அவற்றுள் தலையாயது அவர்கள் வெளியிடும் நூல்களைப் பத்தாயிரக்கணக்கில் வாங்கிப் பல்லிடத்தாரும் படித்துப் பயன்பெறுவது. மற்றொன்று அவர்கள் செய்துவரும் திருத்தொண்டைப் பலரறியப் புகழ்ந்துபேசுவது.

இவ் விருகடமைகளையும் நிறைவேற்றிக் கொள்ளத்தக்க நல்ல சமயம் இப்பொழுது கிடைத்துள்ளது.

"ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்"

என்ப. ஆதலின் அந்த நல்லசமயத்தைக் கைந்நழுவவிடாமல் ஒவ்வொரு தமிழ்மகனும் தன் தன் இயல்புக்குத்தக்கவகையில் ஒழுகிக் கடமையை நிறைவேற்றிக்கொள்வது விரும்பத்தக்கதாம்.

நந்தமிழ் வாழி சாமி நாதவா சிரியன் வாழி
சுந்தர மாக வன்னோன் தொகுத்துமுத் திரித்துத் தூய்தாத்
தந்தபன் னூல்கள் வாழி தக்கபொன் னளித்தோர் வாழி
சந்தத மவற்றைக் கற்போர் தரணியில் வாழி வாழி.

இந்த நிலப்பரப்பி லென்று முளதாகும்
செந்தமிழ் வாழ்க திகழ்செந் தமிழ்ப்பணிக்கே
முந்தருளு வோன்சாமி நாதன் முருகருளால்
சந்ததமும் வாழ்க தழைத்து.

---

17

ஸ்ரீ:

# பரிசோதனத் தொடர்.

(சொல்-இளம்பூரணம்.)

௪௦௨-ஆம் பக்கத்தொடர்ச்சி.

பரிசோதனம் 26. (வினையியல் 46, "வாராக் காலத்து வினைச்சொற் கிளவி, யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று, மியற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை" என்பது சூத்திரம். இது காலவழுக்காத்தல் நுதலிற்று. "எதிர்காலத்துச் செயற்கைச்சொல், அஃது இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையுங்கொள்ளும், இயற்கைக்கண்ணும் தெளிவின்கண்ணும், சொல்லுமிடத்து" என்பது இதற்கு இளம்பூரணர் எழுதிய உரை.

இதனுள் 'எதிர்காலத்துச் செயற்கைச்சொல்' என்றாராயினும் எதிர்கால வினைச்சொல்லான் உணர்த்தற்குரிய செயல் என்பது கருத்தாகக்கொள்ளவேண்டும். அஃது இயற்கைக்கண்ணும் தெளிவின்கண்ணும் இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் கொள்ளுமென இயையும். இயையவே, இயல்பும் தெளிவும்பற்றிய ஒருசார் எதிர்கால வினையினை இறந்தகாலச்சொல்லானும் நிகழ்காலச்சொல்லானும் கூறக் குற்றமின்றென்றதாயிற்று.

இவ்வழுவமைதி இரண்டனுள் இயற்கைக்குதாரணம் 'இக்காட்டுட் போகிற் கூறைகோட்பட்டான், கூறைகோட்படும்' என வரும். தெளிவுக்குதாரணம் 'எறும்பு முட்டைகொண்டு தெற்றியேறின் மழைபெய்தது, பெய்யும்' என வரும். இவ்வுதாரணங்களில் முன்னையது அச்சுப் புத்தகத்தில் 'இக்காடுபோகிற் கூறைகோட்பட்டான்' எனவும், பழஞ் சுவடியில் 'இக்காட்டுட்போகிற் கூறைகோட்பட்டான்' எனவும் பிரதி வேறுபாட்டுடன் காணப்படுகிறது. இது நிற்க.

இச்சூத்திரத்து இயற்கையென்றும் தெளிவென்றும் கூறப்பட்டன யாவை? என்பது கடா. இதற்கு விடை, ஒருபொருளின் தன்மை முதலாயினபற்றி அறியப்படுவது இயற்கை; நூன்முடிபானும் பிறவாற்றானும் துணியப்படுவது தெளிவு: என்பதாம். இங்ஙனமாயினும்

இவை இன்னவென விளக்கும் பகுதி இளம்பூரணருரையிற் சிறிது பழுதுபட்டுள்ளது.

"இயற்கை என்பது அதன்மேற்றீமை; தெளிவு என்பது ஒரு நூன்முடிபானும் பிறிதானுங் கண்டு தெளிதல்:" என்ற அவருரையின் முன்வாக்கியம் பொருளொடு பொருந்தாமை நன்குவெளிப்படும். அச்சுப் பிரதியிற்போலவே பழம்பிரதியினும் ஈண்டு வழுவுண்மையால் இஃது உய்த்துணர்வானே களைதற்குரியது.

இயற்கையென்பது ஒருபொருளின் நன்மை தீமை இரண்டற்கும் பொதுவாய வழக்கு. ஆகலின அவற்றுள் ஒன்றனை வேறுபிரித்து அதன் பொருளாகக் கூறல் அமையாது. ஆசிரியர் தொல்காப்பியர் இக்குத் தீமையையே கருதினரெனின், அஃது இனிதுவிளங்கத் 'தீமை யுந் தெளிவும்' எனச் சூத்திரஞ்செய்திருப்பர். அங்ஙனமல்லாமல் அவர் 'இயற்கையுந் தெளிவும்' என்றமையால் ஒன்றன் தீமையும் நன்மையு மாய இருவகையியல்புமே அவர்க்குக் கருத்தாகவேண்டும்.

இவையேயன்றி உரையாசிரியரும் ஒருபொருளின் தீமையை 'அதன்றீமை' என ஒருவாறு சுட்டுவதல்லது 'அதன்மேற்றீமை' என இடனன்றிப் பிறசொல்லை இடைப்பெய்து தவறிழைப்பாரென்பது திண்ணம். ஆகையால் 'இயற்கையென்பது அதன்மேற்றீமை' என்றபோலி யுரையின் உண்மைவடிவம் யாதாயிருக்குமென ஆராயத்தக்கது.

ஆராயுங்கால், இயற்கை என்பது 'அதன் பெற்றிமை' என ஆதியில் இளம்பூரணர் எழுதியிருந்த வாக்கியம் இங்ஙனம் உருமாற்றம் எய்திற்றேவென ஐயுறக்கிடக்கின்றது. இங்கு 'அதன்' என்றது உரைப்பாரும் உணர்வாரும் உளங்கொண்ட யாதானுமொருபொருளைச் சுட்டிற்றெனல் கூடுமாகலின், அஃது அத்துணைக் குற்றமுடையதன்று. ஒன்றன் இயல்புகுறிக்கும் 'பெற்றி' என்னுஞ் சொல் 'மை'விகுதிபெற்றும் வழங்குமாகலின், அஃது 'இயற்கை' என்பதற்கு ஏற்ற பொருளாக அமைகின்றது. ஆகையால் 'பெற்றிமை' என்பதே பெரும்பாலும் எழுத்துருவொற்றுமையான் 'மேற்றீமை' என வழுப்பட்டதுபோலும்.

இளம்பூரணர்க்குப்பின் உரையிட்ட சேனாவரையரும் "இயற்கை யென்பது பெற்றிமுதலாயினவற்றான் உணரப்படுவது; தெளிவு நூற்



றெளிவான்வருவது" என்று இங்ஙனமே வரைந்தனர். முன்னுரை யாளர் மொழியையும் பொன்னேபோற்றுமுறைகொண்டே இதனுட் பெற்றியென்னுஞ்சொல் ஆளப்பெற்றதென்பது உய்த்துணர்வார்க்கு நன்குபுலப்படும். ஆகவே, இதுவும் மேற்போந்தகொள்கையை வலி யுறுத்தும் சான்றாகின்றது.

இனி, இயற்கைபற்றிய காலவழுவமைதிக்கு உரையிற்காட்டிய உதாரணம் கூறைகோட்படுதலாகிய தீமைப்பயன் குறிப்பதால் 'அதன் மேற்றீமை' என்ற பாடம் ஒருவாறு பொருந்துமோ என ஐயுறல் வேண்டா. ஏனெனில் காட்டுட்போகிற் கூறைகோட்படுதலியல்பு என அதன் பெற்றிமையே அவ்வுதாரணம் உணர்த்திற்றல்லது பிறிதில்லை. இத்தீமைப்பயன்போல வேறு நன்மைப்பயனை இயல்பாகவுடையதும் இவ்விடத்து ஏற்ற உதாரணமாகலாம். அது வழக்குநோக்கி வந்தவழிக் கொள்ளற்பாற்று.

உரையிற்காட்டிய உதாரணம் இங்ஙனம் ஒருதலையாய தீயவியல்பே குறிப்பது, முன்னர் உருவொற்றுமையின் மயங்கின எழுத்தாளரைப் பின்னரும் பேதுறவுசெய்து, அவர் பிழைப்பாடட்டதற்குக் காரண மாயிற்றுப்போலும்!

இதுகாறுங் கூறியவற்றான், அச்சுப்பதிப்பில் 'அதன் மேற்றீமை' என்றிருப்பதை 'அதன் பெற்றிமை' எனத் திருத்திக்கொள்ளல் நல மென்பது முடிந்தது.

பரிசோதனம் 27. (இடையியல் 1.) "இடையெனப் படுப பெய ரொடும் வினையொடும், நடைபெற் றியலுந் தமக்கில் பிலவே" என்பது சூத்திரம். இதன்பொருள், இடைச்சொற்கள் பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் நடைபெறும்; தனித்தியங்கும் ஆற்றலில என்ப தாம்.

இப்பொருளை உதாரணமுகத்தான் விளக்கப்புகுந்த இளம்பூரண ருரை, இடைச்சொல் பெயரோடு நடைபெற்றதற்குமட்டும் ஒருவாறு காட்டிப் பின் அது வினைச்சொல்லோடும் அங்ஙனம் நடைபெற்றதற்குக் காட்டாது நின்றுவிட்டது. அச்சுப்பதிப்பினும் பழம்பிரதியினும் ஒருபடியாக இக்குறைபாடு காணப்படினும், ஆதியில் உரையாசிரியர்

அதற்கும் ஒரு வரலாறு காட்டியிருந்து, பின்னர் அது விழுந்திருக்க வேண்டுமென்று துணியத்தக்கது. சேனாவரையர் காட்டியவாறு 'வருகதில்' என்பதுபோல்வது இங்கு எடுத்துக்காட்டாகலாம்.

'ஆகவே அச்சுப்புத்தகத்தில், 'அதுமன் என்பது பெயரொடு நடைபெற்றது' என்றுள்ள வாக்கியத்தின்பின் "வருகதில் என்பது வினையொடு நடைபெற்றது" என்றாற்போன்றதொரு வாக்கியத்தையும் புகுத்து எழுதிக்கொள்ளல்வேண்டும். அதனால் அவ்வுரையின் குறைப் பொருள் நிறைவுற்று விளங்கும்.

இனி இதனை அடுத்துள்ள விசேடவுரைப்பத்தியில், "தமக்கியல் பிலவே என்றதனான் இடைச்சொற்கள் பகவின்றியே நின்றிசைப்பன வும் உள என்றவாறு; வரலாறு; உண்டான் என்னுந் தொடக்கத்தன:" என்றது சூத்திரத்தில் பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும் என்றலும் கருதியபொருள்பயக்கும்; தமக்கியல்பில என்றல் மிகை; அதனால் இடைச்சொற்கள் அங்ஙனம் நடைபெறுங்கால் அவற்றொடு பக்குநின்றிசைப்பனவும் பகவின்றியிசைப்பனவும் என இருவகைய; அவற்றுள் முன்னர்க்காட்டியன பக்குநின்றன; இனிப் பகவின்றிநின் றன, உண்டான் என்னுந் தொடக்கத்து வினைக்கிடையே அவற்றி னுறுப்பாயிணைந்த இடைச்சொற்களாம்: என்றவாறு.

எனவே, 'அதுமன்' என்பதில் இடைச்சொல் பக்குநின்று பெய ரொடு நடைபெற்றாற்போல அஃது அங்ஙனம் வினையொடு நடைபெற்ற தற்கு மேற்காட்டியவாறு 'வருகதில்' என்பதுபோன்ற உதாரணம் இன்றியமையாதாம். 'தமக்கியல்பிலவே' என்ற மிகையினாற் கொள்ளப் பட்டு, இங்கு உண்டான் என்றற்றொடக்கத்து வினைச்சொல்லின் அகத் துறுப்பாய்ப் பகவின்றி நடைபெற்ற இடைச்சொற்கள் அவ்விடத்திற் குரிய எடுத்துக்காட்டாகமாட்டா.

[தொடரும்.]

T. N. அப்பனையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
இராமேசுவரதேவஸ்தானம் பாடசாலை, மதுரை.

---

உ

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௧௧௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

77. 'பிறர்மனை எய்திய பெண்ணைப் பேணுதல்
திறனல தென்றுயிர்க் கிறைவன் தீர்ந்தனன்.
புறன்அலர் அவன்உறப் போது போக்கி, யான்
அறனல தியற்றினேன்: என்கொண் டாற்றுகேன்?'

இ-ள். 'அன்னியன்வீட்டையடைந்த பெண்ணை (த் திரும்ப வீட்டுக்குக் கொண்டுவந்து) ஆதரித்தல் தகாததென்று என் பிராண நாயகன் (என்னை மீட்குதலை) விட்டுவிட்டான். (அப்படி அவன் விட்ட பின்பு, 'அவன்மனைவி அயலான்மனையிலிருக்கின்றா' ளென்று) பக்கத் துள்ளார் (தூற்றும்) பழிச்சொல்லை அவன் அடையாநிற்க, (யான் இறந்து அப் பழிச்சொல்லுக்கு ஆதாரமில்லாததாகச்செய்யாமல், எனக்கு நன்மையின்றி அவனுக்குத் தீங்குசெய்கின்றவளாய் அவப்) பொழுதுபோக்கி (அயல்மனைவாழ்க்கையாகிய) அதர்மத்தைச்செய்து கொண்டிருந்தேன். (யான் உயிர்விடுதலன்றி வேறு) எதனால் (அவன் பழியடைதலை) நீக்குவேன்? (அவன் பழியடைதல் நீங்கச் சாவேனாக என்றவாறு.)'

பேணுதல் - பாதுகாத்தல். திறன் - திறம் (என்பதன் போலி) - தகுதி. உயிர்க்கு இறைவன் - பிராணநாயகன் - கணவன். தீர்தல் - விடுதல்; நீங்குதல். புறன் - பக்கம், பக்கத்துள்ளாரை யுணர்த்தியது. அறன் - அறம் (என்பதன் போலி) - தருமம். அறன் அலது - தருமம் அல்லாதது - அதர்மம். என் - எது. ஆற்றுதல் - தணித்தல்; நீக்கல். 'அறனலதியற்றிவே' றென்பதும் பாடம்.

78. 'எப்பொழு திப்பெரும் பழியின் எய்தினேன்,
அப்பொழு தேஉயிர் துறக்கும் ஆணையேன்.
ஒப்பரும் பெருமறு உலகம் ஓதயான்
துப்பழிக் குய்வது துறக்கம் துன்னவோ?'

இ-ள். 'எப்பொழுது (பிறன்மனைவாழும்) பெரும்பழியை அடைந்தேனோ, அப்பொழுதே உயிரைவிடவேண்டிய கடமையுடையேனானேன். உலகத்தார் (என்னைக் குறித்துக்) குற்றங்கூறுநிற்க, நான் மரியாதைகெட்டு உயிர்வாழ்தல், நற்கதியடைதற்கோ? (நரகம் அடைதற்கேயாம்.)'

ஆணை - ஆன்றோர்மரபு; கடமை; நியதி; மரியாதை. மரியாதையற்றவனைத் 'தப்புக்கெட்டவன்' என்பது உலகவழக்கு. உய்தல் - உயிர்வாழ்தல். துறக்கம் - சுவர்க்கம். துன்னுதல் - அடைதல்.

79. 'அன்பழி சிந்தையர் ஆய ஆடவர்
வன்பழி சுமக்கினும் சுமக்க, மற்றுயான்
துன்பழி பெரும்புகழ்க் குலத்துள் தோன்றினேன்;
என்பழி துடைப்பவர் என்னின் யாவரே?'

இ-ள். '(யான் புகுந்த குடியினரான) இராமலக்குமணர் (அவர்களது க்ஷத்திரியகுலப்பெருமை கெட, அவர்கள் வீட்டுக்கு வந்த பெண்ணைக் கவர்ந்தவனைக் கொன்று அவளை மீட்காத) கொடும்பழியை ஏற்றுக்கொண்டாலும் கொள்ளட்டும். (அது, அவர்கள் காரியம்; அதற்கு நான் பொறுப்பாளியன்று.) மிக்ககீர்த்தியையுடைய (சனகமகாராசனது) குலத்திலே தோன்றிய யான், என் (பிறந்தகுலத்துப் பெருமைகெடப் பிறன்மனைவாழும்) பழியை (ஒழிக்கும் கடமையுடையேன். அப் பழியை) யானல்லாமல் யாவர் நீக்குவார்? (இராமலக்குமணர் என்னைச் சிறைமீட்டாலும், அப்பழி பொழியாது. அது யான் செத்தால்தான் ஒழியும். ஆதலால் சாதலே தக்கது.)'

அன்பழி சிந்தையர் - அன்பற்ற நெஞ்சினர், இராமலக்குமணர் தன்னைச் சிறைமீட்காமையால் கோபத்தால் தன்பக்கல் 'அன்பழி சிந்தையர்' என்றாள். துன்பு அழி - (துன்ப காரணங்களை விலக்கியதனால்) துன்பம் நாசமான - துன்பத்தை யறியாத. துடைத்தல் - நீக்குதல். 'சுமக்க வாலுயர்' என்பதும் பாடம்.

80. 'வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கி,என்
மஞ்சனை வைது,பின் வழிக்கொள் வாயென
நஞ்சனை யான் அகம் புகுந்த நங்கையான்,
உய்ஞ்சனென் இருத்தலும் உலகம் கொள்ளுமோ?'



இ-ள். 'கபடமுடைய (மாரீசனான மாய) மான்பின்னே என் நாயகனைப் போகச்செய்து, என் பிள்ளைபோன்ற (என் அன்புக்குப்பாத்திரமான) இலக்குமணனைக் கடுஞ்சொற் கூறி (என் நாயகனை)ப் பின்பற்றிப் போவாயாக (என்று சொல்லி அனுப்பி என்னைக் காப்பவரை அகற்றியானே எனக்குச் செய்த தீங்கினால்) நஞ்சுபோலும் கொடியான் (ஆன இராவணனாற் கவரப்பட்டு அவன்) வீட்டுக்குவந்த பெண்ணாகிய நான் (செத்தொழியாது) உயிர்வாழ்தலை உலகத்தார் (இழிவாகக்கருதுவாரேயன்றி) ஏற்றுக்கொள்வார்களோ? (கொள்ளார். ஆதலால் நான் உயிர்விடக்கடவேன்.)'

மன் - கணவன் (தமிழகராதி). மஞ்சன், மைந்தன் (-மகன்) என்பதன் போலி. நங்கை - பெண்ணிற்சிறந்தாள்; இங்கே பெண்ணிற் கடைப்பட்டாளென்ற எதிரிடைப்பொருள் பயந்து இகழ்ச்சிகுறித்தது. உய்ஞ்சனென், உய்ந்தனென் (-பிழைத்திருந்தேன்) என்பதன் போலி. 'கொள்ளுமோ,' ஏற்றுக்கொள்ளுமோ? ஒப்புக்கொள்ளுமோ? பொறுத்துக்கொள்ளுமோ? என விரித்துக்கூறிப் பொருள்கொள்ள நின்றது.

81. 'வருந்தல்இல் மானமா அனைய மாட்சியார்
பெருந்தவ மடந்தையர் முன்பு, பேதையேன்
"கருந்தனி முகிலினைப் பிரிந்து கள்வர்ஊர்
இருந்தவள் இவள்"என ஏச நிற்பனோ?'

இ-ள். '(தன் திரண்ட மயிர்க்கற்றையில் ஒரு மயிர்போனாலும் உயிரைவிடுகின்ற) கவரிமான்போன்ற (உத்தம மானமுடைய) வரும் (குற்றம் நேர்ந்தால், இறத்தலன்றி உயிரோடிருந்து) வருந்துதலில்லாதவரும் (வேறெயும் சிறந்த) மேம்பாடுடையவருமான (கற்புப்) பெருந்தவம் படைத்த (அயோத்திமாநகர) மாதர்முன்னே, அறிவிலியான நான் (சிறைமீட்கப்பெற்றுச் சென்றேனானால், அவர்கள், என்னைச் சுட்டி) "ஒப்பற்ற காளமேகம்போன்ற இராமபிரானைப் பிரிந்து கள்ள அரக்கனூரிலே வாழ்ந்தவள் இவள்" என்று (தங்களுள்ளே பேசி என்னை ஏசுவார்களே. அவ்வாறு அவர்கள்) ஏச(க் கேட்டபோது இறந்துவிடுவேனேயன்றி, உயிர்தாங்கி) நிற்பேனோ! (அப்போது சாதலினும் இப்போது சாதல் நன்று.)'

மானமா - கவரிமான். 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் - உயிர்நீப்பர் மானம் வரின்' என்ற குறட்கருத்து இங்கே யெடுத்தாளப் பட்டது. மாட்சி - பெருமை - மேன்மை. பேதை - அறிவிலி. தனி - ஒப்பற்ற. முகில் - மேகம்.

தன்னைக் காக்கும் இராமலக்குமணரைத் தன்னைவிட்டுப் பிரியச் செய்து காப்பிழந்து கவரப்பட்டுச் சிறைப்பட்டதுகருதித் தன்னைப் 'பேதையேன்' என்றாள்.

82. 'அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசற
விற்பணி கொண்டரும் சிறையின் மீட்டநாள்,
"இற்புகத் தக்கலை" என்னின், யான்உடைக்
கற்பினை எப்பரி சிழைத்துக் காட்டுகேன்?'

இ-ள். '(இங்கேயே சாகநேருவதை யெண்ணிப்பாராமல், அயோத்திக்குப்போனபோது சாகநேருமென்றேன்.) அதிசய (வீர)ன் (ஆன என் நாயகன் இங்கேவந்து) இராக்கதவமிசம் சிறிதுமில்லாமல் (அடியோடு) அற்றுப்போம்படி வில்லின்தொழிலை மேற்கொண்டு, மீட்டற்கரிய சிறையினின்று என்னை மீட்டபோது, "என் வீட்டுக்குள்ளே புகுதற்குத் தகுதியுடையையல்லை" என்றால் என்னுடைய கற்புடைமையை எவ்வாறு (நிரூபணஞ்) செய்து காட்டுவேன்? (காட்டுமாறு இல்லையாதலால், அப்போது விடக்கடவதாகிய உயிரை இப்போது விட்டுவிடுதல் நல்லது)'

வருக்கம் - வமிசம். ஆசு - அற்பம். விற்பணி - விற்றொழில். எப் பரிசு - எவ்விதம். இழைத்தல் - செய்தல். 'இழைத்தல்' என்பது, இங்கே, நிற்கும் இடத்தின் ஆற்றலால், நிரூபணஞ்செய்த லென்ற பொருள்கொள நின்றது. நிரூபணஞ்செய்தல் - உருசுப்படுத்தல் - மெய்ப்பித்தல்.

சீதை தற்கொலைசெய்யப்புக்க இடத்தில் 'ராமதூதன்'
என்று சொல்லித் தொழுது அனுமான் தோன்றல்.

[சீதாதேவி இவ்வாறு புலம்பிச் சாகமுடிவுசெய்து, இதுவே இறத்தற்கேற்ற இடமென்று ஒரு குருக்கத்திமரச்செறிவை அடைந்தாள். (அவள் புலம்பியதைக் கேட்டுக்கொண்டிருந்த) அனுமான் அவள்கருத்தை யூகித்துணர்ந்து அவள் தற்கொலைசெய்யத்தொடங்கியிட்டால், தொட்டுத் தடுக்கவேண்டிவருமென்று அஞ்சித் தற்கொலை



தொடங்குமுன்னேயே தடுத்தற்கு உபாயம், தான் ராமதூதனெனத் தெரிவித்தலேயென்று கருதி 'அடியேன் ராமதூதன்' என்றுசொல்லிக் கும்பிட்டுக்கொண்டு அவளெதிரேபோய்நின்றான்.]

ஆராய்ச்சிக்குறிப்பு.

(இங்கே, சற்றுநின்று, கம்பர் இந்தச் சுந்தரகாண்டத்தில், இது வரை, நாம் யூகித்துணரும்படி, குறிப்பித்திருப்பவை எவையெவை என ஆராய்தல், தகுதியாயிருக்கின்றது:—

ஊர்தேடுபடலத்தில், அனுமான் சீதையைத் தேடும்போது, இராவணனைத் தம் உயிருக்குயிராகக்கொண்ட அவனுடைய பலசாதி மனைவிமார் அவன் தம்பால் வருதற்கு அளவற்ற விருப்புடனிருக்க, அவன் அவர்களோடிணங்கி அவர்களையும் தன்னையும் களிப்புறச்செய்யும் அறநெறியகன்று மறநெறிபுகுந்து தன்னைத் துரும்பென மதித்த பிறன்மனைவியை விரும்பும் பெரும்பேதைமையை அனுமான் கண்கூடாகக் காண்பதையும், - காட்சிப்படலத்தில், கல்லிடுக்கில் முளைத்து மழைத்துளிகண்டறியாத * அருமந்த சஞ்சீவி † மூலி போல வாடி, 'மென்மருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்து,' இராமனைப் பிரிந்ததை நினைந்து வருந்தி, அவனோடு கூடிவாழ்ந்த காலத்து நிகழ்ந்தவைகளையெல்லாம் நினைந்து, நெடிது பிரலாபித்து அத்தியந்த துக்கத்தையடைந்து கொடும்புலிக்கூட்டத்தின் நடுவே யகப்பட்ட மான்போலக் கரிய பெரிய விகாரவடிவமும் கடிய கொடிய கோரகிரியையு முடைய இராட்சசிகளிடையேயுள்ள சீதையைக் கறுத்த மேகபடலத்தைக் கிழித்து வெளிப்படும் மின்னைப்போல அனுமான் கண்ட தற்சமயத்தில் இராவணன் வருதலையும், - நிந்தனைப் படலத்தில், அவன் பலவாறு நயமொழி புகன்றும் பயமொழி பகர்ந்தும் அவளை இணங்கும்படி வேண்ட, அவள் வெறுத்து மறுக்க, அவன் கொடுங்கோபங்கொண்டு 'இணங்காயேல் இறப்பாய்' என அவளையும் 'இணக்கீரேல் இறப்பீர்' என அவளைக் காக்கும் அரக்கியரையும் பயமுறுத்திவிட்டுப் புறப்பட்டுப்போதலையும், - இந்த உருக்காட்டுபடலத்தில், முன்னமே உயிர்விடுமெண்ணம் உதிக்குமளவுக்கு ஒருபடியே குறைந்த உச்சத்துன்பத்தை உற்றிருந்த சீதைக்கு, இராவணனும் அவனுக்குப் பின்பு இராட்சசிகளும் உறுத்திய வருத்தத்தினால் உயிரை விடுமெண்ணம் உண்டாயிருந்தசமயத்தில் அனுமானது மந்திரத்தி

*அருமருந்தன்ன. †மூலி - மூலிகை - செடி.

னால் அரக்கியர் உறக்கமுற, அவள் கண்டு, சாகச் சமயம்வாய்த்ததை அறிந்து, இருத்தலினும் இறத்தலே நன்றென்று, அவன்காதுகேட்கப் பலபடப் புலம்பி அவன் கண்காணச் சாகப்போவதையும் கம்பர் இனிது புனைந்துரைத்திருப்பது, — இரவில் நெடுநேரம் இலங்கைமாநகரமெங்கும் *இலைப்புரைகிளைத்துப்பார்த்துச் சடைந்து இறுதியில் அசோகவனத்தை அடைந்து சீதையைக் கண்ட அநுமான் சிறிது நேரம் தாழ்த்து அங்கே வந்திருப்பானானால், ஆங்கு நிகழ்ந்த அதிமுக்கியமான செய்திகளைத் தெரிந்திருக்கமாட்டான், அச் செய்திகளின் இயற்கைமுடிவும் அத்தியந்த முக்கியமுமான சீதை தற்கொலையைத் தடுத்திருக்கவுமாட்டானென்ற எண்ணத்தை நம் மனத்துள் எழுப்பி, அநுமான் நேராகக் கண்ணாலும் காதாலும் தெரிந்துகொள்ளும்படி முன்னமே சித்தஞ்செய்துவைக்கப்பட்ட நனியினிய நாடகக்காட்சிகளை நாம் மனக்கண்கொண்டுகாண நடித்துக்காட்டுவதுபோன்றிருக்கின்றது.)

### இராமன் வராமை ஏதனாலெனல்.

83. 'ஈண்டுநீ இருந்ததை இடரின் வைகுறும்
ஆண்டகை அறிந்திலன்; அதற்குக் காரணம்
வேண்டுமே; அரக்கர்தம் வருக்கம் வேரொடும்
மாண்டில. ஈதலால், மற்றும் வேண்டுமோ?'

இ-ள். 'நீ இங்கேயிருப்பதை இராமன் அறிந்தானில்லை. (எதற்கும் காரணம் வேண்டியிருப்பதுபோல) அதற்குக் காரணம் வேண்டுமன்றோ. (அது நீ அறிந்ததே. ஆயினும் கூறுகின்றேன். அக்காரணம்,) அரக்க வமிசங்கள் (அனைத்தும்) அடியோடும் அழியவில்லை யென்பதே. (இதுவே போதிய காரணம்.) வேறேயும் (காரணம்) வேண்டுமோ?' (வேண்டியதில்லை யென்றபடி)

ஈண்டு - இங்கே. இடர் - (சீதையைப்பிரிந்த) துன்பம். வைகுதல் - தங்குதல். ஆண்டகை - ஆண்தகை - ஆண்தன்மை - ஆண்மை - வீரம்: வீரமுடையானான இராமனைக்குறித்தது. மற்றும் - வேறு (காரணமு)ம். 'காரணம் வேண்டுமோ', 'ஈதலால் மாறு வேறுண்டோ' என்பனவும் பாடங்கள்.

சீதை இலங்கையிலிருப்பதை இராமன் அறிதலாகிய காரணத்துக்கும் அவன் அரக்கரனைவரையும் அழித்தலாகிய காரியத்துக்கும்

*நுட்பமாகத் தேடி.



இடையேயுள்ள காலம் மிகவும் குறைவானதாமென்பதை உறுதியாக உணர்த்தற்கு அந்தக் காரணகாரியங்களை முன்பின்னாக மாற்றி வியப்பும் நயப்பும் விளையக் கூறினான். இது, காளிதாசமகாகவி சாகுந்தல நாடகத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் காரணம் காரியத்துக்குப் பிந்தியதாகச் சமத்காரமாகக்கூறியதை நினைப்பூட்டுகின்றது. அது வருமாறு:—

'துஷ்யந்தன் (மாரீசமுனிவனைநோக்கிக் கூறுவது), "பெருமானே! முதலிற் குறித்தது நிறைவேறியதும், பிறகு தங்கள் தரிசனமும் கிடைத்தமையால் தங்கள் அனுக்கிரகம் ஒப்பில்லாததாயிருக்கின்றது. என்னை? முதலில் மலர் தோன்றுகின்றது, அதன்பின் கனி உண்டாகின்றது; முதலில் கார் எழுகின்றது, அதன்பின் மழைபொழிகின்றது. இது தான் காரண காரிய முறை. மற்று இங்கோ, தங்கள் அனுக்கிரகம்பெறுதற்குமுன்னரே செல்வம் வரலாயிற்று."'

### அநுமான், தான் உண்மையாக இராமதூதனெனச் சீதை நம்புமாறு கூறுதல்.

[அநுமான், சீதையின் முகக்குறியால், அவள் தன்னைச் சந்தேகிக்கின்றாளென்று உணர்ந்து 'சந்தேகிக்காதே, என்னிடத்தில் இராமபிரான் கொடுத்தருளிய அடையாளப்பொருள் இருக்கின்றது. அன்றி, உனக்கும் அவனுக்குமே தெரிந்த சில நிகழ்ச்சிகள் அவன் என்னிடம் கூறியருளினவும் உள்ளன' என்று சொல்லிக் கீழே விழுந்து வணங்கி எழுந்து கைகூப்பிநின்றான். அவள், அவன் வார்த்தையும் தோற்றமும் அன்பைக் காட்டுவனவாகக் கருதியதனால் அருளும், ஒருகால் அகத்தே வஞ்சகமுடையனாய்ப் புறத்தே அன்புடையான்போல நடிக்கின்றானோ எனக் கருதியதனால் கோபமும் கொண்டு, பின்பு அவனைக் கூர்ந்துநோக்கி, இவன் உள்ளத்துள்ள நல்லெண்ணங்கள் இவன் முகத்திற் பிரதிபலித்தலால், இவன் தேவனாகவாவது முற்றத்துறந்த முனிவனாகவாவது இருக்கவேண்டுமென்றெண்ணினாள்.]

### வந்தவன் எவனாயினும் என்? ராமநாமத்தைச் சொன்னான் உயிரை உதவினான் எனச் சீதை நினைதல்.

84. 'அரக்கனே ஆக, வேறோர் அமரனே ஆக, அன்றிக்,
குரக்கினத் தொருவனே தான் ஆகுக; கொடுமை ஆக,
இரக்கமே ஆக: வந்திங் கெம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிர்: இதின் உதவி உண்டோ?'

இ-ள். '(நான் சந்தேகித்தபடி இவன் குரங்குபோல வஞ்சகமாக வேடம்பூண்ட கொடுமையுடைய) இராக்கதனேயானாலு மாகட்டும், (அன்றி, எனக்கு நன்மைசெய்ய இரங்கிக் குரங்குவேடங்கொண்டு வந்த) தேவனேயானாலு மாகட்டும், (வேடதாரிகளான இவ்விருவரும்) அல்லாமல் (தோற்றப்படியே உண்மையிலேயும்) குரங்குக்கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனேயானாலு மாகட்டும்; (இவன் இராக்கதனாயிருந்தால், இவன் செய்யக்கருதியது கொடுமையாம். அப்படிக்) கொடுமையானாலும் ஆகட்டும்; (இவன் தேவனாயிருந்தால், இவன் வந்த காரணம் என் மீது கொண்ட இரக்கமாம், அப்படி) இரக்கமானாலும் ஆகட்டும்: (இவன் அரக்கனாயினும் அமரனாயினும், இவன் செய்தது *நன்மையே. இவன், தான் இருக்குமிடத்திலிருந்து எவ்வளவோ தூரம் கடந்து நானிருக்கும்) இவ்விடத்துக்கு வந்து எம்பிரானுடைய திருநாமத்தை உச்சரித்து என் உணர்வை உருக்கினான். (அதனால் என்) உயிரை(ச் சாவாமல் காத்து) உதவினான். (எல்லா உதவிகளினும் உயர்ந்த உயிருதவியாகிய) இந்த உதவிக்கு மேலான உதவியுண்டோ? (இல்லை).' (என்று சீதை பெண்ணினாள்.)

உணர்வை உருக்கினன், உயிர்தந்தான் என மாற்றுக. 'இதின்' என்பது அடுத்துவரும் 'உதவி' என்பதனால் 'இந்த உதவியினும்' என்ற பொருள்பட்டுநின்றது. தேவர், அரக்கருக்கு மாறானவராதலால் 'அரக்கனே ஆக' என்றபின் 'வேறோர் அமரனே ஆக' என்றாள். 'அரக்கனே ஆக' 'அமரனே ஆக' எனக் கூறியிருக்கும் வரிசைக் கியைய, 'அவர்கள் தன்மைகளைக் 'கொடுமை ஆக' 'இரக்கமே ஆக' என நிரல்படக்கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

'இச் செய்யுளினால், சீதை இராமபிரானிடத்துக் கொண்டுள்ள பேரன்பு நன்குவிளங்கும்.'

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

*நன்மை, ராமநாமோச்சாரணத்தைக் குறித்தது.

உ

# காலம்.

வேலூர் S. M. D. H. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
வித்வான். K. S. விசுவநாதசாஸ்த்ரி, P. O. L. அவர்கள் எழுதுவது

[௫௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## வாரம்.

வாரமென்பது 7 நாட்கள் கொண்டதொரு காலப்பகுதியினை உணர்த்துமென்பதை அனைவரும் உணர்வர். இவ்வேழுநாட்களுக்கும் ஞாயிறுமுதலாய கோள்களின் தொடர்பு தோன்றுமாறு ஞாயிற்றுக்கிழமை (பானுவாசரம், சண்டே Sunday) திங்கட்கிழமை (இந்துவாசரம், மூன்டே=மண்டே Monday) என்று இவ்வகையே பெயரமைத்திருக்கின்றனர். இம்முறையே பெயரமைத்ததுமாத்திரமின்றி ஞாயிறு முதலாக முறைப்படுத்தும்வகையிலும் அனைவரும் ஒருமித்த கருத்துடையராயிருப்பதும் கருதற்பாலதே. பழந்தமிழ்நூல்களுள் ஞாயிறு திங்கள்முதலிய சொற்களெல்லாம் பெரும்பாலும் ஞாயிறு திங்களென்னும் கோண்மீன்களையே (—ஒளிகளையே) குறிப்பனவன்றிக் காலக்கூறுகளைக் குறிக்கும் இயல்பின அல்ல. ஆயினும் பிற்காலத் தவ்வகை படைத்துக்கொள்ளப்பட்டதென்பது ஞாயிற்றுக்கிழமை (ஞாயிற்றுக்குரியது) என்பதுபோன்ற பெயர்களினின்றே உணரலாம். இவ்வேழு நாட்களையும் வாரமென்று குறித்து வழங்குவது புதியனபுகுதலேயாம். வாரமென்ற சொற்பிரயோகம் சிலப்பதிகாரத்து மிகுதியாகக் காணப்படுகின்றது. ஆனால் அவ்விடத்து அது,

"வாங்கிய வாரத் தியாழுங் குழலும்
ஏங்கிய மிடறு மிசைவன கேட்ப" (அரங். 50—1) என்றும்,
"வார மிரண்டும் வரிசையிற் பாட" (ஷை 136)

என்றும் இவ்வாறு ஒருவகை இசையுருவம் தெய்வப்பாடல் முதலிய பொருள்களையே உணர்த்துகின்றது; கடைச்சங்கநூல்களுள்ளும் பெருவரவினதாகக் காணப்படவில்லை. எவ்வகையிலும் 7 நாட்களையுணர்த்தும் ஆற்றலுடைய வாரமென்னும் ஒருசொல் புதியதாகவே காண்கின்றது. இப்புதுமொழி எங்கிருந்து எவ்விதம் வந்திருக்கக்

கூடும்? என்று சிந்திப்போமாயின் ஒன்று தோற்றுகின்றது. அது தான் யாதெனின் நாளென்பதனை வடமொழியில் வாசரமென்பர். ஞாயிற்றுக்கிழமை முதலியவற்றை அவர் ஆதித்யவாசரம் சோமவாசரம் என்று வழங்க, ஆந்திரர்கள் அவற்றை ஆதித்யவாரமு சோமவாரமு என்பர். ஆகவே வடமொழி வாசரமே வாரமு என்று தெலுங்கில் திரிந்துவருவதுபோல் வாரமென்று திரிந்து வாரமு வாரமு அல்லது வாரம் வாரம் என்று முடியக்கூடிய 7 நாட்களையும் குறித்ததொரு மொழியாகித் தமிழிலும் திசைச்சொலென்றவகையிற் றழுவிக்கொள்ளப் பட்டதொரு புதுமொழியேயாகும்.

## மாதம்

இனி மாதமென்ற பாகுபாட்டினைப்பற்றியும் சிறி தாராய்வோம். திங்களின் தேய்வுவளர்ச்சிகளையுடைய பிறையிரண்டும் சேர்ந்த அல்லது கதிரவன் ஒவ்வொரு ராசியிலும் நிற்கின்ற அல்லது ஏறத்தாழ 30 நாட்கள்கூடிய ஒருகாலப்பகுதியே இப்பொழுது நம்மால் மாதமெனப்படுவதாகும். இதனையே சிலர் திங்களின் தேய்வு வளர்ச்சிகளால் வந்ததென்கின்றனர். வேறுசிலர் ராசியுடன் ஞாயிறுகொண்ட தொடர்பாலுண்டாயதென்கின்றனர். மற்றுஞ்சிலர் நக்ஷத்திரங்களோடு அம் மதிக்குண்டாய தொடர்பாற்றோன்றிய தென்கின்றனர். இன்னும் சிலர் மதியின் தொடர்பேயும் வேண்டாது நாட்கணக்கேயிடுகின்றனர். இவையனைத்திலும் ஒவ்வோரளவு உண்மையும் இருக்கின்றது. அதனையும் மேற் சிறிதுணரலாம். மாதம் என்னும் சொற்பொருளையாராயுமிடத்து அம்மாதம் என்னும் பாகுபாடுதான் திங்களின் தொடர்புபெற்றதென்றே நன்கு விளங்கும். இக்காலத்து நமது தமிழ்நாட்டில் வழங்கிவருகின்ற இச்சொல்—மாச என்பதன் தற்பவமொழியாகும். அம்மொழியும் மாஸ் என்றிருந்தே பிறகு மாஸமென்றாகியிருக்கிறது. மாஸ் என்பதற்குத் திங்களென்பது பொருள். ஆகவே திங்களின் தொடர்புபற்றியே மாதமென்ற பாகுபாடெழுந்ததென்பது தெளிவாகும்.

அன்றியும், தமிழ்மொழியில் திங்கள் என்றே பழந்தமிழ்நூல்கள் மாதத்தைக் குறிப்பிடுகின்றன. அவை வருமாறு:—

1 'திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன' (தொல். உயிர்மயங். 84.)



(ஐகார ஈற்று மாதப்பெயரும் நாட்பெயரும் இகர ஈற்றுத் திங்களும் நாளும் போல இக்கும் ஆனும் பெற்று முடியும். (உ. ம்.) சித்திரைக்குக் கொண்டான், கேட்டையாற் கொண்டான்)

2 'திங்கள் முன்வரி னிக்கே சாரியை' (தொல். உயிர்மயங். 46.)

(இகரஈற்று மாதப்பெயரின்முன் தொழினிலைக்கிளவி வரின் இக்கு சாரியையாம். ஆடிக்குச்சென்றான்.)

இவையன்றிச் 'சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென' (புகார்—இந்திர-64) 'ஆடித் திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமிஞான்று' (வஞ்சி—கட்டுரை 133) என வரும் சிலப்பதிகாரத் தொடர்களும் 'திங்கள் வலித்த காலன் னோனே' என்ற புறப்பாட்டின் பிரயோகம் முதலியனவும் இதனை நிலைநாட்டும்.

மதியென்றும் மாதத்தைக் குறிப்பதுண்டு.

'யாண்டும் மதியும் நாளும் கடிகையும்' (நீர்ப்படை—9)

என்ற சிலப்பதிகாரமும்,

'யாண், டிருது மதிநா ளாதிக் காலம்'

என்றதுபோன்ற பிற்காலத்துப்பிரயோகமும் இதனையுணர்த்தும்.

இவ்வாறு திங்கள் மதி என்னும் தமிழ்வழக்கும், 'நெல' வென்பதனாற் சந்திரனையும் மாதத்தையும் உணர்த்தும் தெலுங்கர்வழக்கும், அவ்விதமே கன்னடமொழியில் கண்ணும் 'திங்களு' என்று மாதத்தைக் குறிப்பிடுவதும் இதனை வற்புறுத்தும். தெலுங்கு நெலவுக்குத் தமிழ் நிலவோடு தொடர்பும் கூர்ந்து காணத்தக்கதாகும். தமிழில் நிலா நிலவு சந்திரன் என்று பொருள்படுவது காண்க. தமிழ்த்திங்கள்கூடக் கன்னடத் திங்களுவினின்றும் உகரக்குறைந்திருத்தலாகிய வேற்றுமை யொன்றே பெற்றிருக்கின்றது. இம்மொழியனைத்தும் தமிழ்க்குடும்பத்தைச்சார்ந்தனவேயாதலின் இத்தகையவொற்றுமைபெற்றிருப்பதும் இயற்கையே. ஆங்கிலமொழியிலுங்கூட மூன் (Moon), மன்த் (Month) என்றிரண்டுமொழிகளின் இயல்பும் மதியின்தொடர்புடையது மாதப் பாகுபாடென்ற உண்மையினை வலியுறுத்தும் ஆனால் முதன்முதல்

ஆங்கிலேயர் யாண்டைப் பத்துமாதமேயுடையதாகப் பகுத்துவைத்திருந்தனர் என்றும், கி. மு. முதல்நூற்றாண்டினரான ஜூலியஸீஸர் அகஸ்டஸ் என்ற இவ்விருவரின் பெருமைகருதி அவர்களின் ஞாபகார்த்தமாக ஜூலை, ஆகஸ்ட் என்ற இரண்டுமாதங்களையும் சேர்த்துப் பிறகு பன்னிரண்டுமாதமாகப் பகுத்தனர் என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். ஸெப்டம்பர் முதலிய மாதப்பெயர்களின் இயல்பைக் காண்போமாயின் அவ்வாராய்ச்சியாளரின் கூற்றிலும் ஓரளவு உண்மை உளதென்பது வெளியாகும். வடமொழிக்கும் ஆங்கிலமொழிக்கும் மொழிக்குரிய உறவுண்டென்று மொழிநூலார் இயம்புகின்றனர். அவர் கூறுகின்ற உறவும் இக்கருத் துணைசெய்கின்றது. அதுதான் என்னை எனின், 'ஸப்த' என்பது வடமொழியில் ஏழு என்னும் பொருளுடையது, ஸெப்டம்பர் என்ற மாதப்பெயரோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது இதனை நோக்க இது முதலில் ஏழாவதுமாதத்தின் பெயராக அமைந்திருக்கவேண்டும். இவ்விதமே 'அஷ்ட' என்ற வடமொழிக்கும் அக்டோபர் என்ற மாதப்பெயருக்குங்கூட இவ்வியல்பு அமைந்திருத்தலின் அக்டோபர் என்பதும் முதலில் எட்டாவது மாதத்தின் பெயராகவே வழங்கப்பெற்றிருத்தல்வேண்டும். நவம்பர் என்பதைக் காண்போமாயினும் 'நவ' என்னும் வடசொல்லோடு தொடர்புடையதாகத் தோற்றுவது புலனாம். ஆகவே அதுவும் முன்பு ஒன்பதாவது மாதமாகவே வழங்கியிருத்தல்வேண்டும். டிஸம்பர் 'தச' என்பதனோடு தொடர்புகொண்டதாகக் காண்டலின் அதுவும் பத்தாவதுமாதமாகவே வழங்கியிருக்கவேண்டும்.

இவ்வாறாகவே ஜூலை ஆகஸ்ட் என்ற இரண்டும் பிற்காலத்தில் இடையிலே புகுந்தன என்றும் பிறகு யாண்டு பன்னிரண்டு மாதமுடையதாகப் பகுத்துக்கொள்ளப்பட்டதென்றும் தெளிவாகின்றது.

இதனால் மாதக்கணக்கிடுதலிற் சந்திரனுக்குத் தொடர்புண்டென்று ஆங்கிலேயர் உணர்ந்திராதகாலமும் ஒன்று உண்டு என்பதும் அக்காலத்திலுங்கூட நமது தமிழ்மக்கள் மதிக்கும் மாதத்திற்கும் உள்ள தொடர்பை அறிந்திருந்தனர் என்பதும் நன்கு புலனாகின்றதன்றோ.



இவ்வியல்பினை உணர்ந்த நம் முன்னோர்சிலர் வளர்பிறையின் முதல்நாளையே மாதத்தின் முதல்நாளென்கின்றனர் வேறுசிலர் தேய்பிறையின் முதல்நாளே மாதத்திற் காரம்பமென்கின்றனர். இத்திங்கள் தானும் நக்ஷத்திரந்தோறுஞ் சென்று அந்த நக்ஷத்திரமண்டலத்தை ஒருமுறை வட்டமிடுவானாயின் அஃதொருமாதமென்பா ரொருசாரார். இவ்விதமே சந்திரனைக்கொண்டு கணக்கிடுதலைச் சாந்திரமானமென்பர் சோதிடநூலோர்.

